கட்டுகின்ற கல்லூரிக்கு ராஜாஜி பெயரை வைக்க முன்வருவார்களா? குறிப்பாக ஓசூரில் அரசாங்க கலைக் கல்லூரியைக் கட்டி ராஜாஜி பெயரை வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது வைக்கப்பட்டிருக்கும் பெயர்கள் எல்லாம்கூட ஆங்காங்கு நிதி வசூலில் ஈடுபடுகின்ற குழுவினர் என்ன பெயரைச் சிபாரிசு செய்கிறார்களோ அந்தப் பெயர்தான் அந்தந்தக் கல்லூரிகளுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் என்ற பெயரில் எந்தக் கல்லூரிக்கும் பெயர் வைக்கப்படவில்லை. ஐந்து லட்சம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்து இன்னார் பெயரை வைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி முறைப்படி அனுப்பி வைத்தால் அந்தப் பெயரை வைக்கலாம். அதற்கான முயற்சியில் ஈடுபடும்படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Grants to Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur

* 95 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have given any grants to the Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur in Thanjavur district during the past five years; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : இங்கு எல்லா மியூசிகல் இன்ஸ்ட்ருமென்ட்சும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படி நாயனம், தவில் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஈடுபடவில்லை, இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக வசதி வாய்ப்புகள் செய்து தரப்படுகிறது. சிலபல கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றவைகளை ஏற்பாடு செய்யவும், நாதஸ்வரம், தவில் கச்சேரி ஏற்பாடு செய்யவும் இயல் இசை நாடக மன்றம் உதவி செய்து வருகிறது. வயதான கலைஞர்கள், தவில், நாயன வித்வான்கள் 58 வயதானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவிச் சம்பளம் அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.